உ

கணபதிதுணை.

ஔவையாரருளிச்செய்த

# வாக்குண்டாமூலமும்

திலியம்பூர்ச்

சந்திரசேகர கவிராஜபண்டிதர்

செய்த - பதவுரையும்.

இஃது

பரிப்பாக்கம்

முனிப்பமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையினது

விவேகவிளக்க வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விபவ ௵

THE TANJORE RAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE
1137

1305

## வாக்குண்டாம்-பதவுரை.

### காப்புவெண்பா.

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

| பதம். | பொருள். |
|---|---|
| துப்பார் | பவளம்போலச்சிவப்பாகிய |
| திருமேனி | திருமேனியையும் |
| தும்பிக்கையான் | துதிக்கையையுடையவிநாயகரது |
| பாதம் | திருவடிகளை |
| பூக்கொண்டு | மலரைக்கொண்டு |
| தப்பாமல் | காலந்தப்பாமல் |
| சார்வார்தமக்கு | சேர்ந்து (பூசைசெய்) வோர்க்கு |
| வாக்கு | மதுரமானவாக்கு |
| உண்டாம் | உண்டாகும் |
| மா | பெருமைபொருந்திய |
| மலராள் | ஸ்ரீதேவியினுடைய |
| நோக்கு | அருட்பார்வை |
| உண்டாம் | உண்டாகும் |
| மேனி | அவருடையஉடம்பு |
| நுடங்காது | (பிணிகளால்)வாடிப்போகாது |

(வாக்கு-மனம்-நோக்கு-எழுவாய் - உண்டாம்- பயனிலை, மேனி, எழுவாய், நுடங்காது- பயனிலை) * பூசித்தோர்க்கு கல்வியும், நல்லமனமும், செல்வமும், தேவிமையும் உண்டாமென்ப

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா-நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்டநீரைத்
தலையாலே தான்றருத லால்.

| பதம். | பொருள். |
|---|---|
| நின்று | பூமியின்மேலேநின்று |
| தளரா | தளராமல் |
| வளர் | வளர்கின்ற |
| தெங்கு | தென்னமரமானது |
| தாளுண்ட | தன்னடியினலேல்புண்ட |
| நீரை | (வேறு) நீரை |
| தலையாலே | தன்முடியினலே |
| தருதலால் | (இளநீராக்கித்) தருதலினல் |
| ஒருவற்கு | (யோக்கியனுகிய) ஒருவனுக்கு |
| நன்றி | ஒருபகாரத்தை |
| செய்தக்கால் | செய்தால் |
| அந்நன்றி | அந்தவுபகாரத்தை |
| என்று | என்றைக்கு |
| தருங்கொலென | செய்வானேவென்று |
| வேண்டாம் | (நீசந்தேகிக்க) வேண்டுவதில்லை |

(நீ-தோன்று-எழுவாய,வேண்டாம்-பயனிலை)*யோக்கியனுக்கு உபகா... ந்செய்தால் அதன்வணக்கத... கோடு விளைவி... ...ழிக... ஞ்செய்வானென்பதாம்,த... ரா-எ... ...ர்மறைவினையெச்சம்(...

நல்லா ரொருவருக்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே-அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

| பதம். | பொருள், |
|---|---|
| நல்லார் | நற்குணத்தையுடையவராகிய |
| ஒருவருக்கு | ஒருவருக்கு |
| செய்த | பண்ணின |
| உபகாரம் | உதவியானது |
| கன்மேல் | கருங்கல்லின்மே (லெழுதிய) |
| எழுத்துப்போல் | எழுத்தைப்போல |
| காணும் | (நெடுங்காலம்) விளங்கும் |
| அல்லாத | ஒழிந்த |
| ஈரமில்லா | அன்பில்லாத |
| நெஞ்சத்தார்க்கு | மனத்தையுடையவர்க்கு |
| ஈந்த | செய்த |
| உபகாரம் | உதவியானது |
| நீர்மேல் | சலத்தின்மே (லெழுதிய) |
| எழுத்திற்கு | எழுத்திற்கு |
| நேர் | ஒப்பாகும்-எ-று, |

(உபகாரம்-எழுவாய், காணும்-நேர்என்பன பயனிலை) நல்லோருக்கே உபகாரஞ்செய்யவேண்டு மென்பதாம். (உ)

இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா வளவி லினியவும்-இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

| பதம். | பொருள். |
| --- | --- |
| இளமை | இளமைப்பருவத்தில் |
| வறுமை | தரித்திரம் |
| வந்தெய்தியக்கால் | வந்துகூடுமாயின் |
| இன்னா | (அவ்வறுமை) துன்பந்தருவதாகும் |
| இன்னாவளவில் | முதுமைப்பருவத்தில் |
| இனியவும் | நல்லபொருள்களும் |
| இன்னாத | துன்பந்தருவனவாகும் |
| நாளல்லாநாள் | காலமல்லாதகாலத்தில் |
| பூத்த | மலர்ந்த |
| நல் | நல்ல |
| மலரும் | மலரையும் |
| ஆளில்லா | நாயகனில்லாத |
| மங்கைக்கு | மங்கைப்பருவப்பெண்ணிற் குண்டாகிய |
| அழகு | அழகையும் |
| போலும் | ஒத்திருக்கும்-எ-று. |

(அவ்வறுமை-எழுவாய், இன்னா- பயனிலை - இனிய எழுவாய், இன்னாத-பயனிலை) * வறுமையோடுகூடிய இளமையும், முதுமையோடுகூடிய செல்வமும், பயன்படாமல் அழியுமென்பதாம். (௬)

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்-கெட்டாலும்
மேன்மக்கண் மேன்மக்களே சங்கு சுட்டாலும்
தான்மிக்க வெண்மை தரும்.

| பதம். | பொருள். |
|---|---|
| பால் | பாலானது |
| அட்டாலும் | (நெருப்பின்மேல்வைத்துக்) காய்ச்சி[னாலும் |
| சுவையில் | (தனது)மதுரத்தினின்றும் |
| குன்றாது | குறையாது (மிகும்) |
| சங்கு | சங்கானது |
| சுட்டாலும் | (நெருப்பினுள்வைத்துச்) சுட்டாலும் |
| தான்மிக்க | தான்மிகுந்த |
| வெண்மை | வெள்ளைநிறத்தையே |
| தரும் | காட்டும் (அதுபோல) |
| மேன்மக்கள் | மேலோர் |
| கெட்டாலும் | (சிநேகித்தவராலே) கெட்டாலும் |
| மேன்மக்களே | மேலோராகவேவிளங்குவார் |
| நண்பல்லார் | சிநேககுணமில்லாதகீழோரோடு |
| அளவல்ல | அநேகவிதங்களாலே |
| நட்டாலும் | சிநேகித்தாலும் |
| நண்பல்லார் | (அவர்)சிநேகிதராகார்-எ-று. |

(மேன்மக்கள் எழுவாய், மேன்மக்கள்-பயனிலை, நண்பல்லார் எழுவாய்,நண்பல்லர்-பயனிலை) *மேலோரோடுதானே சிநேகிக்கவேண்டுமென்பதாம். (௪)

அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா-தொடுத்த
உருவத்தா னீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

| பதம். | பொருள். |
| --- | --- |
| எடுத்த | தான்மேற்கொண்ட |
| கருமங்கள் | தொழில்கள் |
| அடுத்து | மேலும் மேலும் |
| முயன்றாலும் | முயற்சிசெய்தாலும் |
| ஆகுநாள் | முடியுங்காலம் |
| அன்றி | அல்லாமல் |
| ஆகா | முடியாவாம் |
| தொடுத்த | கிளைத்த |
| உருவத்தால் | உருவத்தினால் |
| நீண்ட | நீண்டிருக்கின்ற |
| உயர் | உயர்வாகிய |
| மரங்களெல்லாம்- | எல்லாமரங்களும் |
| பருவத்தால் | பழுக்குங்காலம்வந்தால் |
| அன்றி | அல்லாமல் |
| பழா | பழாவாம்-எ-று. |

(கருமங்கள்-எழுவாய், ஆகா பயனிலை) * யாவரும் ஒருதொழிலை முடியுங்காலமறிந்து தொடங்கவேண்டு மென்பதாம்.

உற்றவிடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ-கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கில்
தளர்ந்து வளையுமோ தான்.

| பதம். | பொருள். |
|---|---|
| உற்றவிடத்தில்- | (மானக்கேடு) வந்தவிடத்தில் |
| உயிர் | உயிரை |
| வழங்கும் | விட்டுவிடும் |
| தன்மையோர் | குணமுடையோர் |
| பற்றலரை | (தம்) பகைவரை |
| கண்டால் | பார்த்தால் |
| பணிவரோ | வணங்குவாரோ (வணங்கார்) |
| கல் | கல்லினாலாகிய |
| தூண் | கம்பமானது |
| பெரு | பெரிய |
| பாரம் | பளுவை |
| தாங்கின் | சுமந்தால் |
| பிளந்து | பிளவுபட்டு |
| இறுவதல்லால் | ஒடிவதல்லாமல் |
| தளர்ந்து | தளர்ச்சியடைந்து |
| வளையுமோ | வளைந்துநிற்குமோ (வளையாது) |

தன்மையோர்-எழுவாய், பணிவரோ - பயனிலை.
மாணிகள் - மானங்கெடவந்தபோது உயிரையேவிடுவ ரென்பதாம். (௬)

நீரளவே யாகுமா நீராம்ப றுன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு-மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

| பதம். | பொருள். |
| --- | --- |
| நீர் | நீரிலிருக்கின்ற |
| ஆம்பல் | அல்லியானது |
| நீரளவே | நீருயரத்தினளவாகவே |
| ஆகும் | இருக்கும் (இதுபோலஒருவனுக்கு) |
| நுண் | நுட்பமாகிய |
| அறிவு | புத்தியானது |
| தான்கற்ற | தான்படித்த |
| நூலளவே | சாஸ்திரத்தினளவாகவே |
| ஆகும் | உண்டாயிருக்கும் |
| தான்பெற்ற | தான்பெற்றுக்கொண்ட |
| செல்வம் | ஐஸ்வரியமானது |
| மேலை | முற்பிறப்பிற்செய்த |
| தவத்தளவே | தவத்தினளவாகவே |
| ஆகும் | உண்டாயிருக்கும் |
| குணம் | குணமானது |
| குலத்தளவே | தான்பிறந்தகுலத்தினளவாகவே |
| ஆகும் | உண்டாயிருக்கும்-எ-று. |

(ஆம்பல்-அறிவு-செல்வம்-குணம், எழுவாய, அள வாகும்-பயனிலை) * ஒருவனுக்கு-அறிவு-கல்வியளவும் குணம்-குலத்தினளவுமா மென்பதாம், (எ)

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே-நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

| பதம். | பொருள். |
|---|---|
| நல்லாரை | நல்லவரை |
| காண்பதுவும் | காணுதலும் |
| நன்றே | நல்லதே |
| நலம் | நன்மை |
| மிக்க | மிகுந்த |
| நல்லார் | நல்லவருடைய |
| சொல் | சொற்களை |
| கேட்பதுவும் | கேட்குதலும் |
| நன்றே | நல்லதே |
| நல்லார் | நல்லவருடைய |
| குணங்கள் | (நற்) குணங்களை |
| உரைப்பதுவும் | பேசுதலும் |
| நன்றே | நல்லதே |
| அவரோடு | அந்நல்லவரோடு |
| இணங்கி | கூடி |
| இருப்பதுவும் | இருத்தலும் |
| நன்று | நல்லது-எ-று. |

(காண்பது-கேட்பது-உரைப்பது- இருப்பது-எழுவாய்-நன்று-பயனிலை.) * நல்லோரைக்காணுதன்முதலாகிய நான்கும் நல்லனவென்பதாம். (அ)

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

| பதம். | பொருள். |
|---|---|
| தீயாரை | தீயவரை |
| காண்பதுவும் | காணுதலும் |
| தீதே | தீயதே |
| திருவற்ற | சிறப்பில்லாத |
| தீயார் | தீயவருடைய |
| சொல் | சொற்களை |
| கேட்பதுவும் | கேட்பதுவும் |
| தீது | தீயது |
| தீயார் | தீயவருடைய |
| குணங்கள் | (தீக்) குணங்களை |
| உரைப்பதுவும் | பேசுதலும் |
| தீது | தீயது |
| அவரோடு | அத்தீயவரோடு |
| இணங்கி | கூடி |
| இருப்பதுவும் | இருத்தலும் |
| தீது | கொடியது-எ-று- |

(காண்பது-கேட்பது-உரைப்பது இருப்பது - எழுவாய், தீது - பயனிலை) * தீயோரைக்காணுதன் முதலிய நான்குந் தீமையென்பதாம். (௯)

நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மங்கே புசியுமாந்-தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை-

| பதம். | பொருள். |
| --- | --- |
| நெல்லுக்கு | நெல்லின்பொருட்டாக |
| இறைத்த | இறைக்கப்பட்ட |
| நீர் | சலம் |
| வாய்க்கால்வழி | கால்வாய்வழியாக |
| ஓடி | சென்று |
| அங்கு | அவ்விடத்திலிருக்கிற |
| புல்லுக்கும் | புல்லினுக்கும் |
| புசியும் | பாயும் (அதுபோல) |
| தொல் | பழமையாகிய |
| உலகில் | உலகத்தில் |
| நல்லார் | நற்குணமுடையவர் |
| ஒருவருளரேல் | ஒருவரிருப்பாயின் |
| அவர்பொருட்டு | அவர்பொருட்டாக |
| எல்லார்க்கும் | யாவருக்கும் |
| மழை | மழை |
| பெய்யும் | பெய்யும்-எ-று. |

(மழை-எழுவாய்-பெய்யும் - பயனிலை) * நல்லோரைச்சேர்ந்த மற்றவரும் பயன்பெறுவரென்பதாம்.()

பண்டுமுளைப்ப தரிசியேயானாலும்
விண்டுமி போனன் முளையாதாம்-கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
யேற்றகருமஞ் செயல்.

| பதம். | பொருள். |
|---|---|
| பண்டு | உமிநீங்குதற்கு-முன்னே |
| முளைப்பது | முளைப்பது |
| அரிசியேயானாலும் | அரிசியாகவேயிருந்தாலும் |
| உமி | உமியானது |
| விண்டு | நீங்கி |
| போனால் | போமாயின் |
| முளையாது | (அவ்வரிசி) முளையாது |
| கொண்ட | தம்மிடத்துநீங்காத |
| பேர் | பெருமையாகிய |
| ஆற்றல் | வல்லமையை |
| உடையார்க்கும் | உடையவர்க்கும் |
| அளவு | (முடித்தற்கு வேண்டுஞ்) சாதனங்கள் |
| இன்றி | இல்லாமல் |
| ஏற்ற | எடுத்துக்கொண்ட |
| கருமம் | தொழிலை |
| செயல் | செய்துமுடித்தல் |
| ஆகாது | முடியாது-எ-று, |

(செயல்-எழுவாய்-ஆகாது - பயனிலை.) * மிக்கவல்லவரும் ஒருகருமத்தைச் சாதனமின்றித்தொடங்கலாகாதென்பதாம். (௰௪)

மடல்பெரிதுதாழை மகிழினிதுகந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா-கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

| பதம். | பொருள். |
|---|---|
| தாழம் | தாழம்பூவினது |
| மடல் | இதழ் |
| பெரிது | (உருவத்திற்) பெரிதாயிருக்கின்ற |
| மகிழ் | மகிழம்பூவினது [து |
| கந்தம் | வாசனை |
| இனிது | (மிகவு) மினிதாயிருக்கின்றது |
| கடல் | கடலானது |
| பெரிது | (உருவத்திற்) பெரிதாயிருக்கின்ற |
| நீர் | (அக்கட) னீர் |
| மண் | (உடம்பழுக்கை)கழுவுதற்கும் |
| ஆகாது | உதவாது |
| அதன் | அக்கடலினது |
| அருகு | பக்கத்திலிருக்கிற |
| சிறு | சிறிதாகிய |
| ஊறல் | ஊற்றுக்குழியிலுண்டாகியநீர் |
| உண் | உண்ணத்தக்க |
| நீருமாகிவிடும் | சலமுமாகிவிடும்ஆகையால் |
| உடல்சிறியரென்று | சிறியஉடலினரென்று |
| இருக்கவேண்டாம் | (நீமதியாம) லிருக்கவேண்டாம் |

(மடல்-எழுவாய் - பெரிது-பயனிலை-கந்தம் - எழுவாய்-இனிது-பயனிலை - இருக்க - எழுவாய்-வேண்டா

ம்-பயனில்-மண்ணீர்-எழுவாய் - ஆகாது - பயனில-உண்ணீர் - எழுவாய் - ஆகிவிடும் பயனில) * உருவத்திலேயே ஒருவரைமதிக்கவேண்டாம்-என்பதாம்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

| பதம். | பொருள், |
|---|---|
| கவையாகிக் | கிளைகளையுடையதாகியும் |
| கொம்பாகி | கொம்புகளையுடையதாகியும் |
| காட்டகத்தே | காட்டினிடத்தே |
| நிற்கும் | இருக்கின்ற |
| அவை | அந்தமரங்கள் |
| நல்ல | நன்மையாகிய |
| மரங்கள் | விருட்சங்கள் |
| அல்ல | அல்லவாம் |
| சபை | சபையினது |
| நடு | மத்தியில் |
| நீட்டு | (ஒருவர்) கொடுத்த |
| ஓலை | ஓலையை |
| வாசியா | படியாமல் |
| நின்றான் | இருந்தவனும் |
| குறிப்பு | (ஒருவர்) குறிப்பை |
| அறியமாட்டாதவன்- | அறியமாட்டாதவனும் |
| நல் | நன்மையாகிய |
| மரம் | விருட்சங்களாவார்- எ-று. |

(வாசியாநின்றான்-குறிப்பறியமாட்டாதவன் - எழுவாய், மரம் . பயனிலை) * வாசியாதவன் ஓரறிவுயிராமென்பதாம். (௧௩)

கானமயிலாடக் கண்டிருந்தவான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத்-தானுந்தன்
பொல்லாச்சிறகைவிரித் தாடினாற்போலுமே
கல்லாதான் கற்றகவி.

| பதம். | பொருள். |
|---|---|
| கல்லாதான் | வாசியாதவன் |
| கற்ற | (பிழையாகக்) கற்ற |
| கவி | பாட்டைப் (பிரசங்கித்தல்) |
| கானம் | காட்டில் |
| மயில் | மயிலானது |
| ஆட | கூத்தாட |
| கண்டிருந்த | (அதைப்) பார்த்திருந்த |
| வான்கோழி | வான்கோழியானது |
| தானும் | தானும் |
| அதுவாக | அம்மயிலாக |
| பாவித்து | நினைத்து |
| தன் | தன்னுடைய |
| பொல்லா | அழகில்லாத |
| சிறகை | இறகை |
| விரித்து | விரித்து |

ஆடினாற்போலும்-ஆடினதையொக்கும்-எ-று
(கவி-எழுவாய், போலும் பயனிலை) * கல்லாதவன் பிரசங்கம் இகழப்படுமென்பதாம். (௧௪)

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்தவிடதாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்-பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

| பதம். | பொருள். |
|---|---|
| பாங்கு | நன்மை |
| அறியா | அறியாத |
| புல் | அற்பமாகிய |
| அறிவாளர்க்கு | அறிவையுடையவர்க்கு |
| செய்த | பண்ணின |
| உபகாரம் | உதவியானது |
| வேங்கைவரிப்புலிக்கு | வரிகளையுடைய வேங்கைப்புலிக்கு |
| தீர்த்தவிடதாரி | விடநோயை நீக்கியவொருவன் |
| ஆங்கு | அவ்விடத்தில் |
| அதனுக்கு | அவ்வேங்கைப்புலிக்கு |
| ஆகாரமானாற்போல் | இரையானாற்போலவும் |
| கல்லின்மேல் | (கருங்) கல்லின்மேல் |
| இட்ட | போட்ட |
| கலம் | மட்பாத்திரம்போலவுமழியும் |

(உபகாரம்-எழுவாய், கலம்-பயனிலை) * தீயோருக்குச்செய்த உபகாரம் கெடுவதுமன்றிஉபகாரஞ்செய்தவனும் அழிவானென்பதாம். (௧௫)

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா-மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன்வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

| பதம். | பொருள். |
|---|---|
| கொக்கு | கொக்கானது |
| மடைத்தலையில் | (நீர்) மடையினிடத்து |
| மீன் | (சிறு) மீன்கள் |
| ஓடிஓட | ஓடிப்போகவிட்டு |
| ஒருமீன் | (தன்னிரைக்கமைந்த) ஒருபெருமீன் |
| வருமளவும் | வருகிறவரைக்கும் |
| வாடி | அடங்கி |
| இருக்குமாம் | இருக்கும் (அதுபோல) |
| அடக்கம் | (ஏற்றகாலம்வரும்வரையில்) அடக்க |
| உடையார் | உடையவர் [த்தை |
| அறிவு | விவேகம் |
| இலரென்று | இல்லாதவரென்று |
| எண்ணி | நினைத்து |
| கடக்க | (அவரை) வெல்ல |
| கருதவும் | (நீ) நினைக்கவும் |
| வேண்டாம் | வேண்டுவதில்லை-எ-று. |

(நீ தோன்று எழுவாய், வேண்டாம் பயனிலை) * தம்பகைவரைவெல்லக் காலம்பார்த்து அடங்கி யிருப்பாரை-அறிவிலரென்று வெல்ல நினைக்கவும் வேண்டாமென்பதாம். (௰௬)

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்-அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு.

| பதம். | பொருள். |
|---|---|
| அற்ற | (நீ)ரற்ற |

| | |
|---|---|
| குளத்தின் | குளத்திலிருந்து |
| அறு | நீங்கிப்போகின்ற |
| நீர்ப்பறவைபோல்- | நீர்வாழ்பறவையைப்போல் |
| உற்றுழி | (வறுமை) வந்தபோது |
| தீர்வார் | நீங்குவோர் |
| உறவல்லர் | உறவாகார் |
| அக்குளத்தில் | அந்தக்குளத்திலே |
| கொட்டியும் | கொட்டியும் |
| ஆம்பலும் | அல்லியும் |
| நெய்தலும்போல | நெய்தற்செடியும்போல |
| ஒட்டி | வருந்தி |
| உறுவார் | (அவரைவிட்டு) நீங்காதவரோ |
| உறவு | உறவினராவர்-எ-று |

(தீர்வார்-எழுவாய், உறவல்லர்-பயனிலை-உறுவார்-எழுவாய், உறவு-பயனிலை * செல்வமுற்றபோதும்வறுமையுற்றபோதும் பிரியாதவரோ-உறவினரென்பதாம்.

சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகுஞ்-சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகுமென்னாகு
மண்ணின் குடமுடைந்தக் கால்.

| பதம். | பொருள். |
|---|---|
| சீரியர் | மேலோர் |
| கெட்டாலும் | (தம்முடைய செல்வம்) கெட்டாலும் |
| சீரியர் | (அம்) மேலோர் |
| சீரியரே | மேலோரேயாவார் |
| அல்லாதார் | கீழோர் |
| கெட்டால் | (தம்முடையசெல்வம்) கெட்டால் |

| | |
|---|---|
| அங்கு | அக்கேட்டினால் |
| என்னாகும் | என்னபயனுண்டாகும் |
| சீரிய | சிறந்த |
| பொன்னின் | பொன்னாலாகிய |
| குடம் | குடமானது |
| உடைந்தால் | உடைந்துபோனால் |
| பொன்னாகும் | (பழைய) பொன்னேயாகும் |
| மண்ணின் | மண்ணாலாகிய |
| குடம் | குடமானது |
| உடைந்தக்கால் | உடைந்தால் |
| என்னாகும் | என்னபயனுண்டாகும்-எ-று, |

(சீரியர்-எழுவாய்-சீரியரோ-பயனிலை) * செல்வமிழந்த காலத்திலும்,மேலோர்மரியாதைபெறுவரென்பதாம்,

ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

| பதம். | பொருள். |
|---|---|
| நாழி | ஒருபடியை |
| ஆழ் | ஆழமாகிய |
| கடல் | சமுத்திரத்திலே |
| ஆழ | முழுக |
| அமுக்கி | அமுத்தி |
| முகக்கினும் | மொண்டாலும் (அது) |
| நானாழி | நாலுபடியளவாகிய |
| நீர் | சலத்தை |
| முகவாது | மொள்ளாது (அதுபோல) |

உஉ வாக்குண்டாம்-பதவுரை

| | |
|---|---|
| தோழி | பாங்கியே |
| நிதியும் | (பெண்கள்) திரவியத்தையும் |
| கணவனும் | புருஷனையும் |
| நேர்படினும் | தடையறப்பெற்றாலும் |
| தந்தம் | தங்கள் தங்கள் |
| விதியின் | ஊழினளவாகிய |
| பயனே | பிரயோசனமே |
| பயன் | (வருகிற) பிரயோசனமாகும் |

(பயன்-எழுவாய், பய்ன்-பயனிலை) * ஒருவர் வேண்டிய செல்வமுதலியவற்றைப் பெற்றிருக்கினும், விதியின்படியே அநுபவிப்ப ரென்பதாம். (மகு)

உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி-உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

| பதம். | பொருள். |
|---|---|
| வியாதி | நோயானது |
| உடன்பிறந்தே | தன்னுடன்பிறந்தே |
| கொல்லும் | கொல்லும் (ஆதலால்) |
| உடன்பிறந்தார் | தன்னுடன்பிறந்தவரோ |
| சுற்றத்தாரென்று | துணையாவாரென்று |
| இருக்கவேண்டாம் | நீநம்பி)யிருக்கவேண்டாம் |
| உடன்பிறவா | தன்னுடன்பிறவாத |
| மா | பெரிய |
| மலையிலுள்ள | மலையிலிருக்கின்ற |
| மருந்தே | மருந்துகளே |
| பிணி | நோயை |

| | |
|---|---|
| தீர்க்கும் | நீக்கும் |
| அம்மருந்து | அந்தமருந்தை |
| போல்வாரும் | ஒத்தவரும் |
| உண்டு | (உலகத்திற்சில) ருண்டு-எ-று. |

(நீ-தோன்றா-எழுவாய், இருக்கவேண்டாம் - பயனிலை, போல்வார்-எழுவாய்,உண்டு-பயனிலை) * உடன்பிறந்தார் தீங்குசெய்தலும்,அந்நியர்-நன்மைசெய்தலும், உளவாமென்பதாம். (உ௰)

இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்-இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

| பதம். | பொருள். |
|---|---|
| இல்லாள் | மனையாள் |
| அகத்து | வீட்டில் |
| இருக்க | இருந்தால் |
| இல்லாதது | இல்லாதபொருள் |
| ஒன்றில்லை | ஒன்றுமில்லை |
| இல்லாளும் | மனையாளும் |
| இல்லாளேயாமாயின் | இல்லாமற்போனாலும் |
| இல்லாள் | மனையாள் |
| வலிகிடந்த | கடினமாகிய |
| மாற்றம் | சொற்களை |
| உரைக்குமேல் | சொல்லுவாளேயானாலும் |
| அவ்வில் | அந்தவீடு |
| புலிகிடந்த | புலியிருந்த |
| தூறாய்விடும் | புதலுக்கு-ஒப்பாகும்-எ-று. |

(இல்லாதது - எழுவாய், இல்லை - பயனிலை, அவ்வில் எழுவாய், தூறுப்விடும்-பயனிலை) * நற்குணநற்செய் கையையுடைய மனைவியில்லாத வீடு - மிருகங்கள் தங் கும் புதலையொக்குமென்பதாம். (உக)

எழுதியவாறுமென் றிராமடநெஞ்சே
கருதியவாறுமோ கருமங்- கருதிட்போய்க்
கற்பகத்தைச்சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காயீந்ததே
முற்பவத்திற் செய்த வினை.

| பதம். | பொருள். |
|---|---|
| எழுதியவாறு | (கடவுள்) கற்பித்தபடியே |
| ஆமென்று | நடக்குமென்று |
| இரா | இராத |
| மடம் | அஞ்ஞானம்பொருந்திய |
| நெஞ்சே | மனமே |
| கருதியவாறு | (நீ) நினைத்தபடிக்கெல்லாம் |
| கருமம் | தொழில்கள் |
| ஆமோ | பயனைத்தருமோ (தராது) |
| கருதி | (நல்லபயனை) அடைவோ |
| போய் | சென்று மென்றுநினைத்து) |
| கற்பகத்தை | கற்பகவிருக்ஷத்தை |
| சேர்ந்தோர்க்கு | அடைந்தவருக்கு |
| காஞ்சிரங்காய் | எட்டிக்காயை |
| ஈந்ததேல் | (அது) கொடுத்ததேயானால் |
| முற்பவத்தில் | முற்பிறப்பில் |
| செய்த | பண்ணின |
| வினை | தீவினையாகும்-எ-று. |

(கருமம்-எழுவாய்-ஆமோ-பயனிலை) * எந்தத்தொழிலும் விதிப்படியன்றி ஒருவன்கருதியபடிபயனைத் தராதென்பதாம். (உஉ)

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும் போல்வாரே-விற்பிடித்
நீர்கிழிய வெய்த வடுப்போலமாறுமே [து
சீரொழுகு சான்றோர் சினம்.

| பதம். | பொருள் |
|---|---|
| கயவர் | மூடர் |
| கடு | கடுமையாகிய |
| சினத்து | (கோபத்தால்வேறுபட்டால் |
| கல் | கல்லினது |
| பிளவு | பிளவை |
| ஒப்பர் | ஒத்திருப்பார் |
| ஒப்பாரும் | நடுவாயினோரும் |
| பொன் | பொன்னினது |
| பிளவு | பிளவை |
| போல்வார் | ஒத்திருப்பார் |
| சீர் | நல்வழியிலே |
| ஒழுகும் | நடக்கின்ற |
| சான்றோர் | கல்வியறிவுடையவரது |
| சினம் | கோபமானது |
| விற்பிடித்து | வில்லைப்பிடித்து |
| நீர் | நீரானது |
| கிழிய | பிளக்க |
| எய்த | (அம்பினாலே) எய்த |
| வடுப்போல | வடுவைப்போல |

மாறும் (உடனே) நீங்கும்-எ-று.

(மூடர்-எழுவாய்-ஒப்பார்-பயனிலை - ஒப்பார்-எழுவாய் போல்வார்பயனிலை-சினம்-எழுவாய்- நீங்கும், பயனிலை) * மூடர்முதலாயினாரியல்பு இத்தன்மையவென்பது. (உரு)

நற்றாமரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்-கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்,

| பதம். | பொருள், |
|---|---|
| நல் | நன்மையாகிய |
| தாமரை | தாமரையையுடைய |
| கயத்தில் | குளத்தில் |
| நல் | நன்மையாகிய |
| அன்னம் | அன்னப்பறவை |
| சேர்ந்தாற்போல் | சேர்ந்ததுபோல் |
| கற்றாரை | வாசித்தவரை |
| கற்றாரே | வாசித்தவரே |
| காமுறுவர் | விரும்புவார் |
| காக்கை | காக்கையானது |
| முதுகாட்டில் | சுடுகாட்டி (லிருக்கிற) |
| பிணம் | சவத்தை |
| உகக்கும் | இச்சிக்கும்(அதுபோல) |
| கற்பில்லா | படிப்பில்லாத |
| மூர்க்கரை | மூடரை |
| மூர்க்கர் | மூடரே |
| முகப்பர் | விரும்புவார்-எ-று. |

(கற்றார்-எழுவாய்-கற்றாரை - செயப்படுபொருள்-காமுறுவர்-பயனிலை-மூர்க்கர்-எழுவாய்ப்- மூர்க்கரைச்செயப்படுபொருள்-முகப்பர்-பயனிலை- காக்கை, எழுவாய்-பிணத்தைச்-செயப்படுபொருள் உகக்கும்பயனிலை,) * கற்றார்-கற்றாரோடும்-மூர்க்கர் - மூர்க்கரோடும்-நட்புக்கொள்வரென்பதாம். (உச)

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு-நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

| பதம். | பொருள். |
|---|---|
| நாகம் | நாகப்பாம்பானது |
| நஞ்சுடைமைதான் | தான்விடமுடையதா யிருத்தலை |
| அறிந்து | தெரிந்து |
| கரந்து | ஒளித்துக்கொண்டு |
| உறையும் | வாசஞ்செய்யும் |
| நீர்ப்பாம்பு | தண்ணீர்ப்பாம்பானது |
| அஞ்சாது | பயப்படாமல் |
| புறம் | வெளியில் |
| கிடக்கும் | இருக்கும் (அவைபோல) |
| நெஞ்சில் | மனதில் |
| கரவுடையார் | வஞ்சனையுடையவர் |
| தம்மை | தங்களை |
| கரப்பர் | ஒளிப்பர் |
| கரவிலா | வஞ்சனையில்லாத |
| நெஞ்சத்தவர் | மனதையுடையவர் |
| கரவார் | தம்மைமறைக்கமாட்டார். |

(நாகம்-எழுவாய்-உறையும்-பயனிலை. நீர்ப்பாம்பு-எழுவாய்-புறங்கிடக்கும்-பயனிலை - நெஞ்சத்தவர்- எழுவாய்-கரப்பர்-கரவார் என்பன- பயனிலைகள்) * வஞ்சகர் - மறைந்தொழுவர் - வஞ்சனையிலார்- மறைந்தொழுகா ரென்பதாம். (உரு)

மன்னனுமாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன் சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு.

| பதம். | பொருள். |
|---|---|
| மன்னனும் | அரசனையும் |
| மாசு | குற்றம் |
| அற | நீங்க |
| கற்றோனும் | படித்த (புவவ) னையும் |
| சீர்தூக்கின் | ஆராயின் |
| மன்னனில் | அரசனிலும் |
| கற்றோன் | படித்த (புலவனே) |
| சிறப்பு | மேன்மையை |
| உடையவன் | உடையவனாவான் |
| மன்னனுக்கு | அரசனுக்கு |
| தன்றேசமல்லால் | தன்தேசத்திலல்லாமல் (மற்றை |
| சிறப்பு | மரியாதை [யதேசத்தில் |
| இல்லை | இல்லை |
| கற்றோர்க்கு | படித்தபுலவனுக்கு |
| சென்ற | போயின |
| இடமெல்லாம் | இடங்களிலெல்லாம் |
| சிறப்பு | மரியாதையுண்டாகும்-எ-று. |

(கற்றோன்-எழுவாய் - சிறப்புடையோன்- பயனிலை சிறப்பு-எழுவாய்-இல்லை-பயனிலை) * அரசரினுங் கற்றோரே சிறப்புடையரொன்பதாம். (உகூ)

கல்லாதமாந்தருக்குக் கற்றுணர்ந்தார்சொற்கூற்றம்
அல்லாதமாந்தர்க் கறங்கூற்றம்-மெல்லிய
வாழைக்குத்தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

| | |
|---|---|
| பதம். கல்லாத | பொருள். படியாத |
| மாந்தருக்கு | மனிதருக்கு |
| கற்று | வாசித்து |
| உணர்ந்தார் | (அவைகளின்பொருளை)யறிந்தவரது |
| சொல் | வசனம் |
| கூற்றம் | யமனாகும் |
| அல்லாத | (தருமவான்க)ளல்லாத |
| மாந்தர்க்கு | மனிதர்களுக்கு |
| அறம் | தருமம் |
| கூற்றம் | யமனாகும் |
| மெல்லிய | மென்மையாகிய |
| வாழைக்கு | வாழைமரத்திற்கு |
| தானீன்ற | தான்பெற்ற |
| காய் | காயானது |
| கூற்றம் | யமனாகும் |
| இசைந்து | (கணவன் கருத்தின்படி யொத்து) |
| ஒழுகா | நடவாத |
| பெண் | மனைவி |
| இல்லிற்கு | இல்லறத்திற்கு |
| கூற்றம் | யமனாகும்-எ-று, |

(சொல்-அறம்-காய்-பெண், எழுவாய்-கூற்றம், பய னிலை) * மூடருக்குக் கற்றோர்சொல்லுஞ் சொல்லும் தருமகுண மில்லாதோர்க்கு அறமும்-நன்றோருக்குத் துன்பஞ்செய்யும் பிள்ளையும் - மனையறத்துக்குத்தகா த பெண்டும், யமனையொக்கும் என்பதாம். (உஎ)

சந்தன மென்குறடு தான்றேய்ந்தகாலத்தும்
கந்தங் குறைபடா தாதலால்-தந்தந்
தனஞ்சிறியராயினுந் தார்வேந்தர் கேட்டான்
மனஞ் சிறியராவரோ மற்று.

| பதம். | பொருள். |
|---|---|
| மெல் | மிருதுவாகிய |
| சந்தனக்குறடு | சந்தனக்கட்டையானது |
| தான்றேய்ந்தகாலத்தும் | தான்தேய்த்துபோன காலத்திலும் |
| கந்தம் | தன்வாசனையில் |
| குறைபடாது | குறையாது |
| ஆதலால் | ஆகையால் |
| தார் | சேனையையுடைய |
| வேந்தர் | அரசர் |
| கேட்டால் | கேட்டினால் |
| தந்தம் | தங்கள்தங்கள் |
| தனம் | செல்வத்தில் |
| சிறியராயினும் | குறைந்தவராலும் |
| மனம் | (மனவலிமையிலே) |
| சிறியராவரோ | குறையார்-எ-று. |

(வேந்தர்-எழுவாய்-சிறியராவரோ பயனிலை) * உய ர்ந்தோர் கேட்டையடைந்தாலும்-மனம்-வேறுபடா ரென்பதாம். (உஅ)

மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவுமுயர்குலமு மெல்லாத்-திருமடந்தை
ஆம்போதவளோடு மாகுமவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

| பதம். | பொருள். |
|---|---|
| மருவு | பொருந்திய |
| இனிய | இனிமையாகிய |
| சுற்றமும் | உறவும் |
| வான் | உயர்ந்த |
| பொருளும் | திரவியமும் |
| நல்ல | நன்மைபொருந்திய |
| உருவும் | அழகும் |
| உயர் | உயர்ந்த |
| குலமும் | சாதியும் |
| எல்லாம் | (ஆகியவிவை)யெல்லாம் |
| திருமடந்தை | சீதேவியானவள் |
| ஆம்போது | வந்துகூடும்போது |
| அவளோடும் | அச்சீதேவியுடனே |
| ஆகும் | வந்துகூடும் |
| அவள் | அச்சீதேவி |
| பிரிந்து | நீங்கி |
| போம்போது | போகும்போது |
| அவளோடும் | அச்சீதேவியுடனே |
| போம் | போய்விடும்-எ-று, |

(எல்லாம்-எழுவாய்-ஆகும் - போம் - பயனிலைகள், செல்வம் சீதேவிவரும்போதுவரும் - அவள்நீங்கும் பேந்து-நீங்குமென்பதாம். (௨௯)

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்-மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்,

| பதம், | பொருள், |
| --- | --- |
| அறிவுடையோர்தாம் | கல்விஅறிவுடையோர் |
| சாந்தனையும் | தாமிறந்துபோமளவும் |
| தீயனவே | தீங்குகளையே |
| செய்திடினும் | பிறர்செய்தாலும் |
| அவரை | அத்தீமைசெய்தவரை |
| ஆந்தனையும் | தம்மாற்கூடியவரையிலும் |
| காப்பர் | காப்பாற்றுவார் |
| கண்டீர் | பார்த்தீர்களா |
| மரம் | மரமானது |
| மாந்தர் | மனிதர் |
| குறைக்குந்தனையும் | தன்னைவெட்டுமளவும் |
| குளிர் | குளிர்ந்த |
| நிழலை | நிழலை |
| தந்து | கொடுத்து [எ-டு |
| மறைக்கும் | வெயிலைமறைக்கும் இதுபோ |

அறிவுடையோர் எழுவாய்-காப்பர்-பயனிலை - ம
ம்-எழுவாய்-மறைக்கும்- பயனிலை * அறிவுடைே
தமக்குத் தீங்குசெய்தவரையும் காப்பரென்பதா

வாக்குண்டாம் - பதவுரை

முற்றிற்று.